பெயார்பஸ்ட் காப்புறுதி லிமிடட்
(நிறுவனம் இலக்கம் : PB5180)
எக்சஸ் டவர் II (14 ஆம் மாடி),
278/4, யூனியன் இடம், கொழும்பு 02, இலங்கை
தொடர்பு இலக்கம் :+94 11 2428428 |
தொலைநகல் :+94 11 2438438
மின்னஞ்சல் : info@fairfirst.lk |
இணையதளம் : www.fairfirst.lk

**காப்புறுதி பத்திர தகவல் ஆவணம் (IPID)**

**வீட்டு பாதுகாப்பு காப்புறுதி பத்திரம்**

**1. காப்பீட்டு விடயதானம்**

வீட்டு பாதுகாப்பு காப்புறுதி பத்திரமானது, உங்களுடைய வீட்டுக்கும் அதன் உள்ளடக்கத்திற்கும் பூரண பாதுகாப்பளிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட நெகிழ் தன்மையுடைய காப்புறுதி பொதியொன்றாகும். கட்டிடங்கள், உள்ளடக்கம், தனிநபர் பொறுப்பு மற்றும் மேலும் பயன்பாடுகள் உட்பட பல்வேறு காப்பீட்டு பகுதிகளைக் கொணடதாகும். உங்களுக்கு மிகவும் பொறுத்தமான பகுதிகளை நீங்கள் தெரிவு செய்யக் கூடியதுடன், உங்களது காப்புறதிப் பத்திரத்துக்குப் பிரயோகமான காப்பீடுகள் மற்றும் வரையறைகள் என்பவற்றை உங்களது காப்புறுதி அட்டவணை தெளிவாக குறிப்பிடும்.

**2. எதனைக் காப்பீடு செய்கின்றது?**

உங்களது காப்புறுதி அட்டவணையில் செயல்பாடானவையென குறிப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளை மட்டுமே உங்கள் காப்புறிதிப் பத்திரம் காப்பீடு செய்யும்.

கட்டிடம் (பகுதி 1) – தீ, மின்னல், வெடித்தல், சூறாவளி, புயல், வெள்ளம், நிலநடுக்கம், வீடுடைப்பு (பலாத்கார உட்புகுதலுடன் களவு) போன்ற ஆபத்துகளுக்கெதிராக வெளிக் கட்டிடங்கள், சுவர்கள் மற்றும் மதில்கள் உட்பட உங்களுடைய வீட்டின் பௌதீக கட்டமைப்பை காப்பீடு செய்யும்.

உள்ளடக்கம் (பகுதி 2) – கட்டிடத்துக்குப் போன்றே அதே ஆபத்துகளுக்கெதிராக வீட்டுச் சாமான்களையும் உங்களுடைய சொந்த உடைமைகளையும் காப்பீடு செய்யும். உங்களுடைய வீட்டுப் பிராணிகளின் எதேச்சையான காயத்துக்கான மிருக வைத்திய பற்றுச்சீட்டுக்கான சிறிய காப்பீட்டையும் இது உள்ளடக்கியுள்ளது.

தனிநபர் பொறுப்பு (பகுதி 3) – விருந்தாளி ஒருவரை உங்கள் வீட்டினுள் வைத்து எதேச்சையாக காயப்படுத்துவதனாலோ அல்லது அவர்களது ஆதனங்களுக்கு சேதம் விளைவிப்பதனாலோ நீங்கள் நிதி ரீதியாக பொறுப்புடையவாரகும் பட்சத்தில் உங்களை பாதுகாக்கும்.

தனிநபர் விபத்து (பகுதி 4) – உங்களது வீட்டினுள் இருக்கும் போது உங்களுக்கு அல்லது உங்களுடை வாழ்க்கைத் துணைக்கு அசம்பாவித விபத்து மரணமோ அல்லது நிரந்தர ஊனமோ ஏற்பட்டால், பணத் தொகையொன்றை வழங்கும்.

வேலையாட்கள் நட்டஇடு (பகுதி 5) – உங்களுக்கு பணியாற்றுவதனால் அவர்களுக்கு ஏற்பட்ட காயங்களுக்கு அல்லது சுகயீனத்துக்கு (4 பேர்கள் வரை) உங்களது வீட்டுப் பணியாட்களுக்கு நட்டஈடுக்கான உங்களது சட்ட ரீதியான பொறுப்பை காப்பீடு செய்யும்.

3. **காப்பீடு செய்யப்படாதன யாவை? (ஒரே பார்வையில்)**

- காலப் போக்கின் காரணமாக ஏற்படும் கிரமமான சேதம், சிதைவு இக்காப்புறதிப் பத்திரத்தின் கீழ் காப்பீடு செய்யப்படவில்லை.
- தொடர்ந்து 30 நாட்களுக்கு மேல் உங்கள் வீடு காலியாக இருத்தல், உங்களது காப்பீடு பாதிக்கப்படலாம்.
- பணம், காசோலைகள், தங்கம் அல்லது வர்த்தக பண்டங்களை இக்காப்புறுதி காப்பீடு செய்யாது.
- குறிப்பாக வெளிப்படுத்தப்பட்டும், உடன்பட்டும் இருந்தாலன்றி நகைகள், கலைப் பொருட்கள் போன்ற பெறுமதி மிக்கனவும் விலக்கப்பட்டுள்ளன.

4. **காப்புறுதிக் கட்டணம் செலுத்துகை**

பொதுவாக ஒரு வருட காலமாகிய காப்புறுதிக் காலத்துக்கு ஒரே செலுத்துகையில் செலுத்தப்பட வேண்டும்.

5. **காப்புறுதி பெறுனரின் கடப்பாடுகள்**

அதே சொத்தை காப்பீடு செய்யும் வேறேதும் காப்புறுதி பத்திரங்களின் விபரங்கள் உட்பட, சொத்தைப் பற்றிய உண்மையானதும், சரியானதுமான தசவல்கள் வழங்கப்பட வேண்டும்.

விட்டிலிருந்து வியாபாரம் ஆரம்பித்தல், சொத்துக்கு பிரதான மாற்றங்கள் அல்லது 30 நாட்களுக்கு மேல் உங்கள் வீடு காலியாக இருத்தல் உட்பட ஆபத்தை அதிகரிக்கத்தக்க ஏதும் மாற்றங்கள் பற்றி காப்புறுதி பெறுனர் உடனடியாக அறிவிக்க வேண்டும்.

கோரத்தக்க சம்பவமொன்றின் போது, காப்புறுதி செய்யப்பட்ட சொத்துக்கு மேலும் இழப்பு அல்லது சேதம் ஏற்படுவதை தவிர்ப்பதற்கான நியாயாமான சகல முன்னெச்சரிக்க நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும், கோரிக்கையை மதிப்பீடு செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள யாரும் மதிப்பீட்டாளர்கள், இழப்பு இயைபாக்குனர்கள் அல்லது விசாரணையாளர்களுடன் முழுமையான ஒத்துழைப்பும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏதும் சேதம் அல்லது சிதைவு பற்றி உடனடிகாய பயார்பஸ்ட்டுக்கு அறிவிக்கப்பட வேண்டியதுடன், சேதத்தின் புகைப்படங்கள் உட்பட சம்பந்தப்பட்ட சகல ஆதார ஆவணங்களும், திருத்த வேலை மதிப்பீடுகளும் மற்றும் பாதிப்புக்குள்ளான அம்சங்களின் உரித்துரிமை சான்றுகளும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

6. **முறைப்பாடுகளையும் இன்னல்களையும் கையாள்தல்**

**படிமுறை 1 – பெயார்பஸ்ட் இன்சூரன்ஸோடு தொடர்பு கொள்ளவும் –**

☎ +94 11 2428282 (மு.ப. 8.30 தொடக்கம் பி.ப. 5.00 வரை) | ✉ – info@fairfirst.lk

உங்கள் விடயங்களை பெயாபஸ்ட்டின் பொறுப்பு & இணக்க குழுவுக்கு கொண்டு செல்லலாம்.

**படிமுறை 2 – (தீர்க்கப்படா விடின்) புறக் கொண்டு செல்லல் –**

- இலங்கை காப்புறுதி சீர்படுத்தல் ஆணையம் (IRCSL)

☎ +94 11 2335167 | ✉ info@ircsl.gov.lk | 🌐 www.ircsl.gov.lk

- காப்புறுதி குறைகேள் அதிகாரி

☎ +94 11 2505542 / +94 11 2505041 | ✉ info@insuranceombudsman.lk |

🌐 www.insuranceombudsman.lk

7. **மேலும் தகவலுக்கு எம்மை தொடர்பு கொள்ளவும் –**

**பெயார்பஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடட்**

எக்சஸ் டவர் II (14 ஆம் மாடி), இல.278/4, யூனியன் இடம், கொழும்பு 02, இலங்கை

☎ +94 11 2428428 | ✉ info@fairfirst.lk | 🌐 www.fairfirst.lk

8. **வேறேதும் தகவல்கள்**

அதன் முழுப் பெறுமதியில் 75% வீதமாவது காப்புறுதி செய்யப்பட வேண்டும். இழப்பொன்றின் போது காப்புறுதி தொகையானது சொத்தின் 75% க்கும் குறைவாயின், காப்புறுதி செய்யப்படாத பகுதிக்கு காப்புறுதி பெறுனரே அவருடைய காப்புறுதி வழங்குனராக கருதப்படுவதோடு, கோரிக்கை செலுத்துகையானது விகிதாசாரமாக குறைக்கப்படும்.

காப்புறுதி அட்டவணையில் செயல்பாடானவையென குறிப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளுக்கு மட்டுமே காப்பீடு வழங்கப்படுகின்றது..

காப்புறுதி செய்யப்பட்ட நபர் 75 வயதை எய்தும் போது, பகுதி 4 இன் கீழான தனி நபர் விபத்து காப்பீடு முடிவுறும். .

**குறிப்பு** – பிரதான காப்பீடு மற்றும் அவசியமாயின், மேலதிக காப்பீடுகளினதும் சாராம்சம் ஒன்றை வழங்குவதே இந்த **IPID** இன் குறிக்கோளாகும். இது உங்களது குறிப்பான தனிநபர் பிரத்தியேக தேவைகளுக்கானதல்ல. முழுமையானதும் பிரத்தியேகமானதுமான தகவல்களை, ஒப்பந்தத்துக்கு முந்திய மற்றும் ஒப்பந்த நியதிகளில் பூரணப்படுத்தவும். உற்பத்தியின் விடுகைகள், உங்களது காப்புறுதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. **IPID** யானது, காப்புறுதியின் / ஒப்பந்தத்தின் அங்கமாகாது. எனவே, ஏதும் சச்சரவின் போது, காப்புறுதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளும் நிபந்தனைகளுமே மேலோங்கியிருக்கும்.